## 1. தலைப்பு 304 – வளி மண்டலவியல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு

---

தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 21 ஆந் திகதி திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 603.18 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 360.06 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 243.12 மில்லியன் அதாவது 40.31 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 255.18 | 248.53 | 6.65 | 2.61 |
| மூலதனம் | 348.00 | 111.53 | 236.47 | 67.95 |
| மொத்தம் | **603.18** | **360.06** | **243.12** | **40.31** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 30401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 12.70 | 11.50 | 7.69 | 10.37 | 55.00 | 31.70 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0132/0015/000 ஆம் இலக்க கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 14.8 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கீழான 04 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9.85 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0112/000 | 0.25 |
| 6000/0000/00/0002/0156/000 | 0.03 |
| 6000/0000/00/0013/0109/000 | 1.18 |
| 6000/0000/00/0016/0100/000 | 8.39 |
| மொத்தம் | **9.85** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) |
| (ii) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |
| (iii) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி |
| (iv) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

30401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் அதன் மாதிரியின் பிரகாரம் ஆண்டின் திருத்திய எல்லைகள் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருந்த எல்லைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருந்த எல்லைகள் இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2014 ஆம் ஆண்டின் போது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 146,072 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.1, 4.2.4, 4.2.5 மற்றும் 4.5 ஆம் பிரிவுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றிற்கிடையே வேறுபாடொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், அதன் பிரகாரம் பெறுகைத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளக கணக்காய்வுப் பிரிவு இரண்டு உதவி உத்தியோகத்தர்களை மாத்திரம் கொண்டிருந்ததுடன் உள்ளக கணக்காய்வாளரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் அது செயலற்றுக் காணப்பட்டது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் 16 பிராந்திய அலுவலகங்களுக்குரிய காணிகளின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 இணக்கமின்மை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (அ) நிதிப்பிரமாணம் 214 | | பொறுப்புக்கள் அன்றாடம் பரீட்சிக்கப்பட்டு முடியுமான வரையில் பொறுப்புப் பதிவேடொன்றில் அப்பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| (i) 2015 மே 15 ஆந் திகதிய நி.அ01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03(அ) பந்தி | 1,303,088 | வெளிநாடு சென்ற உத்தியோகத்தரொருவருக்கு வெளிநாட்டு அரசோ மானிய நிறுவனத்தினாலோ அமையப் படிகள் செலுத்தப்படாத போது மாத்திரம் அமையப் படிகள் செலுத்த முடியுமான போதிலும், மீளாய்வாண்டின் போது சீனாவில் சுற்றுலா மேற்கொண்ட 11 உத்தியோகத்தர்களுக்கான செலவினம் சீன அரசினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நாளொன்றுக்கு 40 அ.டொ. வீதம் ரூபா 1,303,088 தொகை உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2001 யூலை 02 ஆந் திகதிய /2001/03/எம்எவ்/ பீஏ 2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03(அ) பந்தி | | பயிற்சி அல்லது வெளிநாட்டு சுற்றுலாவிற்கு சமூகமளித்த திகதி முதல் 2 வாரங்களுக்குள் வெளிநாட்டு சுற்றுலாவிற்குரிய அறிக்கையொன்று நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 07 உத்தியோகத்தர்களினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.6 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

**டொப்லர் ரேடார் முறைமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) டொப்ளர் ரேடார் முறைமையின் சகல இயந்திர பொருத்துகைகளும் 2013 ஒக்தோபர் 11 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2016 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அதன் மின்முறைமை ஸ்தாபித்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ரேடார் முறைமை செயற்படுத்தப்படுத்தும் நிலைமைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்காக ரூபா 402.83 மில்லியன் பயனற்ற செலவினமாக இருந்தது.

(ii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது ரேடார் முறைமையின் சில அத்தியவசிய பகுதிகள் திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் அப்பகுதிகளை கலற்றி முறைமை நிறுவப்பட்டிருந்த கொக்கல மலை உச்சியிலிருந்து கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக பரிசோதனைகளின் போது 2016 சனவரி 29 ஆந் திகதி வரையிலும் ரூபா 9.15 மில்லியன் பெறுமதியான 08 உபகரணங்கள் வெளித் தரப்பினர்களினால் களவாடப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தமை.

(iii) டோர் முறைமை கொள்வனவு செய்வதற்குரித்தாக உலக வளிமண்டலவியல் அமைப்பு மற்றும் இலங்கை அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சுடன் 05 வருடங்களுக்காக கைச்சாத்திடப்பட்ட நம்பிக்கை பொறுப்பு உடன்படிக்கை 2012 மே 23 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், 2016 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(iv) இது தொடர்பாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 142.68 மில்லியன் காப்புறுதி மேவுகை 2014 மார்ச் 31 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் அதன் திகதியை நீடிப்பதற்கு அல்லது புதிய காப்புறுதி மேவுகையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) இம்முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருந்த ரேடார் நிலையத்திற்கான கட்டிடம் அதன் ஒப்பந்தக்காரரான பொறியியல்சார் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்தினால் முறையாக 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கட்டிட நிர்மாணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) திருகோணமலை வளமண்டலவியல் அலுவலக நிர்மாணம்**

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- திருகோணமலை வளமண்டலவியல் அலுவலக நிர்மாணம் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட திட்டம் கணக்காய்விற்குச சமர்ப்பிக்கப்படவில்லை.

- இந்நிர்மாணம் தொடர்பாக கடிதமொன்று வழங்கப்பட்டதன் பின்னர் முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ii) நுவரஎலிய சுற்றுலா விடுதி பொறுப்பாளரின் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணம்**

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- வளிமண்டலவியல் திணைக்களத்தினால் விபரமான பொறியியலாளர் மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளாமல் மேற்படி நிர்மாண ஒப்பந்த கட்டிடம் திணைக்களத்திற்கு ரூபா 3,950,000 ஆன கிரயத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான ஒப்பந்தம் உடன்படிக்கை 2013 யூலை 12 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அத்திகதிக்கு முன்னர் 2012 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,975,000 தொகை வளிமண்டலவியல் திணைக்களத்தினால் கட்டிட திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்நிர்மாண நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், மேலதிக நிர்மாண நடவடிக்கைகள் காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 5,445,000 வரை அதிகரிப்பதற்கு வளிமண்டலவியல் திணைக்களம் இணங்கியிருந்தது.
- 2013 ஆம் ஆண்டிற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாதன் காரணமாக கட்டிடத் திணைக்களத்திற்கு ஒப்பந்த பணத்தை தீர்ப்பதற்கு முடியாதிருந்தது. அதன் காரணமாக மேலதிகமாக ரூபா 1,495,000 கொடுப்பனவு செய்ய நேர்ந்தது.

**3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 54 | 47 | 7 |
| (ii) | மூன்றாம் நிலை | 238 | 198 | 40 |
| (iii) | இரண்டாம் நிலை | 29 | 8 | 21 |
| (iv) | ஆரம்ப நிலை | 139 | 116 | 23 |
| | மொத்தம் | 460 | 369 | 91 |